மின்பொறியாளர் பொ.ப.து., மின்கோட்டம், திருச்சி அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : பொறிஞர். S.அன்பழகன்,எம்.இ.,
மின் பொறியாளர், பொ.ப.துறை.,
**********

| A.E.E. | |
|---|---|
| A. ASST. | 21 |
| ASST. | |
| J. ASST. | |

செ.மு.ஆ.எண் : கோ-2/நி2/2021/நாள் : 20.11.2021.

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணிதொகுதி தமிழ்நாடு அரசுபணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம் - **செல்வி.R.பிரியங்கா,** இளநிலைஉதவியாளராக இக்கோட்ட அலுவலக கட்டுப்பாட்டில் உள்ள மின்உபகோட்டம் தஞ்சாவூரில் 28.09.2020மு.ப.,முதல் பணிமேற்கொண்டது- இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்தும், தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1 முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொ.ப.து., சேப்பாக்கம் சென்னை அவர்களின் செ.மு.ஆ.எண் எஸ்.3(3)/35935/2020-3/ நாள் : 25.09.2020.

2. தலைமைப்பொறியாளர் (கட்டடம்) திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செ.மு.ஆ.எண் எஸ்1(2)/5055/2020-15/ நாள் : 26.09.2020.

3 கண்காணிப்புபொறியாளர், பொ.ப.து., கட்டட (க&ப) வட்டம், திருச்சி அவர்களின் செ.மு.ஆ.எண்:1414/2020/நி-2/(1471/20) / நாள் : 28.09.2020.

4. மின்பொறியாளர் பொ.ப.து., மின்கோட்டம், திருச்சி அவர்களின் செ.மு.ஆ.எண் கோ-2/நி1/2020 நாள்:28.09.2020.

*************

**ஆணை:**

பார்வை (1)-ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப்பொறியாளர், (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான போட்டித் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு பார்வை (2)ல் காணும் தலைமைப்பொறியாளர் (கட்டடம்) பொபது., திருச்சி மண்டலம், திருச்சி மற்றும் பார்வை 3-ல் காணும் கண்காணிப்புப்பொறியாளர், பொ.ப.து., கட்டட (க&ப) வட்டம், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணைகள் மூலமாக உரிய பணியமர்வாணை வழங்கப்பட்டு பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணை மூலமாக உரிய மறுபணியமர்வாணை வழங்கப்பட்டு **செல்வி.R.பிரியங்கா,**இளநிலை உதவியாளராக இக்கோட்ட அலுவலக கட்டுப்பாட்டில் உள்ள மின் உபகோட்டம் தஞ்சாவூர் அலுவலகத்தில் 28.09.2020மு.ப., முதல் பணிமேற்கொண்டு தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

செல்வி.R.பிரியங்கா, இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 28.09.2020முப., முதல் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2015-ன் விதி 25(1) -ன்படியும் சென்னை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு தொகுதி IV-ன் தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடனும் இளநிலை உதவியாளர் பதவியில் 28.09.2020முப., முதல் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவத்தினை துவக்கி வைத்தும் இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

இவர் மூன்றாண்டுகால தொடர் பணிக்காலத்திற்குள் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவுசெய்ய வேண்டும் எனவும் தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகர் அரசுப்பணியாளர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் அடிப்படை பயிற்சியில் கலந்துகொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணை வழங்கப்படுகிறது.

இவர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறைத் தேர்வில் தேர்ச்சி பெறுதல் மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி பெறுதல் ஆகிய நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும் மேலும் தகுதிகாண் பருவகாலத்தில் எந்தவித விடுப்பில் சென்றாலும், (தற்செயல் விடுப்பு மற்றும் மதச்சார்பு விடுப்பு நீங்கலாக) அதற்கேற்ப தகுதிகாண்பருவம் நிறைவு காலத்திற்கான நீட்டிப்பு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

20/11/2021

**மின்பொறியாளர், பொ.ப.து,**
**மின்கோட்டம், திருச்சி-20.**

20/11/2021 20/11/2021

பெறுநர் :
**செல்வி.R.பிரியங்கா,**
இளநிலை உதவியாளர்,பொ.ப.து.,
மின்உபகோட்டம்,
தஞ்சாவூர்.

வழி : உதவிசெயற்பொறியாளர் மின்உபகோட்டம் தஞ்சாவூர்.

நகல் : உதவிசெயற்பொறியாளர் பொபது., மின்உபகோட்டம் தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. மேற்கண்ட பணியாளர் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் விபரம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.